சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தின் சார்பில் ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட அய்யப்பன்தாங்கல் பணிமனையில் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பணிபுரியும் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள் ஓய்வெடுக்க குளிரூட்டப்பட்ட ஓட்டுநர், நடத்துனர் ஓய்வறையை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் துவங்கி வைத்தார்கள். அருகில் ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளனர்.

திருநெல்வேலி மாவட்ட

பொறுப்பு அமைச்சராக தங்கம் தென்னரசு நியமனம்!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூலை 22

திருநெல்வேலி மாவட்ட பொறுப்பு அமைச்சராக அமைச்சர் தங்கம் தென்னரசை நியமித்து இருப்பதாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகளைத் துரிதப்படுத்தவும், பொது மக்களுக்குச் சென்றடைய வேண்டிய நலத்திட்ட உதவிகளைக் கண்காணிக்கவும், பொதுமக்களிடமிருந்து பெறப்படுகின்ற மனுக்கள் மீது துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்யவும், பேரிடர் காலங்களில் உடனடியாக தக்க நிவாரண பணிகளை மேற்கொள்ளவும், வருவாய் மாவட்ட வாரியாக அமைச்சர் பெருமக்கள் பொறுப்பு அமைச்சர்களாக நியமனம் செய்து ஏற்கெனவே ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இராமநாதபுரம் மாவட்டத்திற்குப் பொறுப்பு அமைச்சராக நியமனம் செய்யப்பட்டுள்ள நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களை அம்மாவட்டத்திற்கு பதிலாக திருநெல்வேலி மாவட்டத்திற்குப் பொறுப்பு அமைச்சராக நியமனம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பஞ்சு இறக்குமதி வரி ரத்து:

முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கையை ஒன்றிய அரசு ஏற்க வேண்டும்!

‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜூலை 22 -

‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாட்டில் தேவைக்கேற்ப பருத்தி விளைச்சல் இல்லை. பருத்தி ஒரு மானாவாரி பயிர். இதை பயிரிட நிறைய நிலம் இருந்தாலும், அதை முழுமையாக பயன்படுத்திக்கொள்ளவில்லை என்றே தெரிகிறது. பஞ்சைக் கொண்டு இயங்கும் நூற்பாலைகள், தமிழக தொழில் பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றுகிறது. அது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் இருக்கும் 1500 நூற்பாலைகள் மூலம் 15 லட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. மேலும், பல உள்கட்டமைப்பு வசதிகள், வர்த்தகங்கள் அந்த நூற்பாலைகள் இருக்கும் பகுதிகளில் உருவாகியுள்ளது.

நூற்பாலைகள் பஞ்சைக் கொண்டு நூலை தயாரிக்கிறது. அந்த நூல் விசைத்தறிகளுக்கு அனுப்பப்பட்டு, அங்கு துணிகளாக நெய்யப்படுகின்றன. நூற்பாலைகளில் நூல் தயாரிக்கும் போது, கழிவு பஞ்சும் கிடைக்கிறது. அதுவும் பயன்படுத்தப்படுகிறது. கழிவு பஞ்சை வைத்து ‘ஒப்பன் என்ட் நூற்பாலைகள்’ என்று அழைக்கப்படும், குறுந் தொழில் நிறுவனங்களின் கீழ்

வரும் கழிவு பஞ்சு நூற்பாலைகள், மொத்த உற்பத்தியில் 35 சதவீதம் அளவுக்கு பங்களிப்பு ஆற்றுகின்றன. இந்த ஆலைகளில் கழிவு பஞ்சைக்கொண்டு நூல் தயாரித்து விசைத்தறி களுக்கு அனுப்பப்பட்டு, அங்கு காடா துணிகள் தயாரிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் நமது தேவைக்கேற்ப பஞ்சு விளையவில்லை. நமது தேவை ஆண்டுக்கு ஒரு கோடி பேலுக்கு மேலாகும். ஆனால், இங்கு விளையும் பருத்தி மூலம் கிடைப்பது 5 லட்சம் பேல்தான். இந்தியா முழுவதுக்கும் மொத்த தேவை 3 கோடியே 50 லட்சம் பேல்களுக்கு மேல். ஆனால், அதில் மூன்றில் ஒரு பங்கு தேவை தமிழ்நாட்டுக்கு இருக்கிறது.

ஆக, தமிழ்நாட்டின் தேவைக்கு அமெரிக்கா, ஆப்பிரிக்கா, எகிப்து, ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளில் இருந்தும், குஜராத், மராட்டியம், ஆந்திரா போன்ற பல வெளிமாநிலங்களில் இருந்தும், பஞ்சை தருவிக்க வேண்டியதிருக்கிறது. தற்போது, பருத்தி விலையில் ஏற்பட்டுள்ள கடுமையான விலை உயர்வு, வங்கி வட்டி உள்ளிட்ட செயல்பாட்டு செலவு, கழிவு பஞ்சுகளின் வெளிநாட்டு ஏற்றுமதி, மின்சார கட்டணம் உயர்வு போன்ற பல காரணங்களால், எங்களால் நூற்பாலைகளை இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, கடந்த சில நாட்களாக உற்பத்தியை நிறுத்தி விட்டோம் என்கிறார், ஒப்பன் என்ட் நூற்பாலைகள் சங்க தலைவர் ஜி.அருள்மொழி.

பல்வேறு நூற்பாலை சங்கங்களின் கோரிக்கை, பருத்தி மீதான 11 சதவீத இறக்குமதி வரியை ரத்து செய்யவேண்டும், கழிவு பஞ்சு ஏற்றுமதிக்கு தடை விதிக்கவேண்டும், மின்சார கட்டண உயர்வைக் குறைக்கவேண்டும், வங்கிக் கடன் வட்டி விகிதங்களை குறைக்க வேண்டும், கடன்களை திருப்பி கட்டுவதற்கான கால அவகாசத்தை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்பதுதான்.

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் 11 சதவீத இறக்குமதி வரியை ரத்து செய்யவேண்டும், கழிவு பஞ்சு ஏற்றுமதிக்கு தடை விதிக்கவேண்டும் என்பது உள்பட பல கோரிக்கைகளை வலியுறுத்தி பிரதமர் நரேந்திரமோடிக்கு கடிதம் எழுதியுள்ளார். இப்போது, நாடாளுமன்றம் நடக்கும் சூழ்நிலையில், தமிழக உறுப்பினர்கள் இந்த கோரிக்கைகளை நிறைவேற்றித்தர மத்திய அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். தத்தளிக்கும் நூற்பாலைகளில் உற்பத்தி நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதால், தொழிலாளர்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படும். இந்த நிலையைப் போக்க மத்திய அரசாங்கம் உதவிக்கரம் நீட்டவேண்டும்.

இவ்வாறு ‘தினத்தந்தி’ தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! வரதை த.பரி தலைமையில்

112வது வட்ட தி.மு.க. சார்பில் 500 பேருக்கு அறுசுவை உணவு!

மு.க.தமிழரசு - நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - அன்பகம் கலை வழங்குகின்றனர்!

சென்னை, ஜூலை 22-

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி சென்னை மேற்கு மாவட்டம் 112 வது வட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 500 நபர்களுக்கு பிரியாணி வழங்கும் விழா நாளை (23-7-2023, ஞாயிற்றுக்கிழமை) மதியம் 11 மணி அளவில் வரதராஜன் பேட்டை மெயின் ரோட்டில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு வரதை த.பரி தலைமை வகிக்கிறார்.

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம் முன்னிலை வகிக்கிறார்.

எஸ்.மனோகரன், வீ.பொன்சீலன், எஸ்.பொற்கொடி, வீ. ராஜீ, ஹச். சக்கரவர்த்தி, எல்.முருகன், ப.சிவக்குமார், ப.பாலாஜி, இ.ஜான் ஆகியோர் வரவேற்புரையாற்றுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் மு.க.தமிழரசு, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., கழக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை, மாநில மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ. மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன் ஆகியோர் கலந்து கொண்டு அறுசுவை உணவினை வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் மருத்துவர் கலை கதிரவன், சென்னை மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப.பிரகாஷ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் டி.ஜோஸ் டேனியேல், தலைமை பொதுக்குழு உறுப்பினர் எம்.டி.ஆர்.நாதன்,

சென்னை மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என். துரை, வி.எஸ்.கலை, எஸ். சங்கிதா, ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், பகுதி கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், வட்ட கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, மகளிர் அணி, அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

112 வது வட்ட துணைச் செயலாளர் ஜெனரேட்டர் ராஜீ நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சி ஏற்பாடு : 112 வது வட்ட செயலாளர் வரதை த.பரி.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! 28வது வட்ட இளைஞர் அணி சார்பில்

மாதவரத்தில் மாபெரும் கிரிக்கெட் போட்டி- மாதவரம் எஸ்.சுதர்சனம் பரிசு வழங்குகிறார்!

டி.ராமகிருஷ்ணன் - மிசா. பா.மதிவாணன் - எஸ்.நந்தகோபால் - ஜி.துக்காராம் - புழல் நாராயணன் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 22

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி இன்றும் நாளையும் (22.7.2023, சனிக்கிழமை), (23.7.2023, ஞாயிற்றுக்கிழமை) என இரு நாட்கள் மாதவரம் பால் பண்ணை மெயின் கேட் அருகில் உள்ள விளையாட்டுத் திடலில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு முதல் பரிசு வென்றவர்களுக்கு பரிசும்,கேடயமும் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர் டி.ராமகிருஷ்ணன் இரண்டாம் பரிசினை வழங்கி சிறப்பிக்கிறார்.

தலைமை செயற்குழு உறுப்பினர் மிசா. பா.மதிவாணன், 3-வது மண்டலக் குழு தலைவர் எஸ்.நந்தகோபால், மாதவரம் தெற்கு - வடக்கு பகுதிச் செயலாளர்கள் ஜி.துக்காராம், புழல் எம்.நாராயணன், வட்டச் செயலாளர் எம்.பிரேம்குமார், வட்ட துணைச் செயலாளர் டி.ஆர்.செங்குட்டுவன், மாதவரம் பகுதி உதயநிதி ஸ்டாலின் நற்பணி மன்றத் தலைவர் டி.ஆர்.ரவீந்திரகுமார் ஆகியோர் கிரிக்கெட் போட்டியினை துவக்கி வைக்கின்றனர்.

எஸ்.கனிமொழி எம்.சி. சிறந்த ஆட்டக்காரர் பரிசு வழங்கி சிறப்பிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் சி.கே. கோபால், எஸ்.எம்.பன்னீர்செல்வம், எஸ்.எம். மோகன், எ.சசிகுமார், எ. ஜெயசெல்வி அசோக்குமார், கே.பி.உசேந்திரன், எ.முனுசாமி, சி.கே.ஜி.தர்மராஜ், டி.சந்திரன், மா. பொ.வே.ராஜா, டி.மதன், யு.காந்திமதி உதயசூரியன், எஸ். நிசார் அகமத், எஸ்.கரண்ராஜ், பி.காசிராஜன், ஆசை தம்பி.

மாமன்ற உறுப்பினர்கள் ஜி.திருமலை துரைசாமி, ஏ.சந்திரன், டி.கார்த்திகேயன், ஜெ.ஆஸ்னா மெரிஷியா, எம்.குணசுந்தரி குட்டி மோகன், கே. காசிநாதன், ஜி.ராஜேந்திரன், நந்தினி சண்முகம் மற்றும் புத்தகரம் இ.ஏழுமலை, வி.எஸ்.ஆர்.ஜெயகுமார், இ.மோகன், ஆ. விஜயலட்சுமி ஆனந்தன்,

எம்.பி. நடராஜன், ஆர். ஞானசேகர், ஏ.சந்திரன், டி.எஸ்.இளங்கோவன், கே.ரமணன், ச.மணிகண்டன், எம்.செல்வம், இ. ராஜேஷ்குமார், எஸ்.சண்முகம், ஜி.தேவிகௌதமன், கே.பாண்டியன், கோட்டை மோசஸ், ஏ.திராவிடவீரன், க.சிவசங்கரன், ஆ.ராஜேந்திரன், எஸ்.கௌரி, ஆர். முரளி, பி.தரணி, பி.நிர்மல்குமார், கு.செல்வம், நா.மோகன் குமார், வி. கார்த்திகேயன், பி.சந்திரன், கே.ஜிம்ராஜா, ச. வினோத், பா.நெல்சன்,

கே.பி.சுந்தரேசன், பா. ஜா.நரசிம்மன், துறைமுகம் நா.பெருமாள், கோ.துரைசாமி, பி.சுரேஷ், எம்.சரவணன், து.ஸ்ரீராமது, மு.குட்டிமோகன், டி. சுந்தரம், க.அங்குசாமி, இ. கண்ணப்பன், கே.கருணாகரன், கா.தாமரை செல்வம், பி.எஸ்.சந்துரு, வி.ஆர்.குப்பன் மற்றும் பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை 28-வது வட்ட தி.மு.க. இளைஞர் அணி சிறப்பாகச் செய்துள்ளது.

சென்னை விமான நிலையத்தில் 2025 ஆம் ஆண்டிற்குள்

3.5 கோடி பயணிகளை கையாள ஏற்பாடுகள்!

மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்விக்கு- ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஜூலை 22 -

தமிழ்நாட்டில் பரந்தூரில் அமையவுள்ள கிரீன்ஃபீல்ட் விமான நிலையத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான நிதி ஆதாரம் குறித்தும், நிலத் தேவைகளை அரசாங்கம் இறுதி செய்துள்ளதா? என்பது குறித்தும் சென்னை, வேலூர் விமான நிலைய கட்டுமானத்தை விரைவு படுத்துவதற்கு அரசு எடுத்துள்ள சீரிய நடவடிக்கை விவரங்கள் குறித்தும், சென்னை விமான நிலையத்தில் விமானங்கள், பயணிகள் மற்றும் சரக்குகளை கையாளும் திறனை அதிகரிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்தும் மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார் அவரது கேள்வி வருமாறு:

தமிழ்நாட்டில் உள்ள பரந்தூரில் கிரீன்ஃபீல்ட் விமான நிலையத் திட்டத்தை செயல்படுத்த தேவையான ரூ.61,000 கோடி நிதியை நிதியுதவி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மூலம் வழங்க ஒன்றிய அரசு திட்டமிட்டு ள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?

கிரீன்ஃபீல்ட் விமான நிலையத் திட்டத்தை நிறுவுவதற்கான நிலத் தேவைகளை அரசாங்கம் இறுதி செய்துள்ளதா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் யாவை? தமிழ்நாட்டில் உள்ள பாரந்தூரில் கிரீன்ஃபீல்ட் விமான நிலையத்தின் கட்டுமா

னத்தை விரைவு படுத்துவதற்கு அரசு எடுத்துள்ள சீரிய நடவடிக்கை விவரங்கள்; சென்னை விமான நிலையத்தில் விமானங்கள், பயணிகள் மற்றும் சரக்குகளை கையாளும் திறனை அதிகரிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள்; வேலூர் விமான நிலைய கட்டுமானப் பணிகள் விரைந்து முடிக்கவும், விமான சேவை நடவடிக்கைகளை தொடங்கவும் அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

இதற்கு விமானப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் வி.கே.சிங் அளித்த பதில் வருமாறு:

இந்திய ஒன்றிய அரசு உருவாக்கிய கிரீன்ஃபீல்ட் விமான நிலையங்கள் (GFA) கொள்கை, 2008 நாட்டில் கிரீன்ஃபீல்ட் விமான நிலையத்தை மேம்படுத்துவதற்கான நடைமுறை மற்றும் நிபந்தனைகளை பரிந்துரைக்கிறது. இக் கொள்கையின்படி, திட்டத்திற்கான நிதியுதவி, நிலம் கையகப்படுத்துதல், R&R போன்ற விமான நிலைய திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பு மாநில அரசு திட்ட ஆதரவாளராக இருந்தால்

அந்தந்த மாநில அரசு உட்பட சம்பந்தப்பட்ட விமான நிலைய மேம்பாட்டாளரிடம் உள்ளது. மேலும்,

காஞ்சிபுரம் மாவட்டம், பாரந்தூரில் உள்ள கிரீன்ஃபீல்ட் விமான நிலையத்தை மேம்படுத்துவதற்கான முதல் கட்ட அனுமதி, அதாவது ‘சைட் கிளியரன்ஸ்’ வழங்குவதற்கான விண்ணப்பத்தை தமிழ்நாடு அரசு சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்திடம் (MOCA) சமர்ப்பித்துள்ளது.

தமிழ்நாடு. GFA கிரீன்ஃபீல்ட் விமான நிலைய கொள்கையின்படி, இந்திய விமான நிலைய ஆணையம் (AAI), சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (DGCA) மற்றும் பாதுகாப்பு அமைச்சகம் (MOD) ஆகியோரின் கருத்துக்களுக்காக முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. பங்குதாரர்களுடனான இந்த ஆலோசனையை முடித்த பிறகு, கிரீன்ஃபீல்ட் விமான நிலையங்களுக்கான வழிகாட்டுதல் குழுவின் முன், தள அனுமதி வழங்குவது தொடர்பாக அவர்களின்

பரிந்துரைக்காக முன்மொழிவு வைக்கப்பட வேண்டும்.

சென்னை விமான நிலையம் உட்பட விமான நிலையங்களில் உள்கட்டமைப்புகள்/வசதிகளை மேம்படுத்துவது என்பது ஒரு தொடர்ச்சியான செயலாகும், இது இந்திய விமான நிலைய ஆணையம் (AAI) அல்லது சம்பந்தப்பட்ட விமான நிலைய ஆபரேட்டர்களால் செயல்பாட்டுத் தேவைகள், போக்குவரத்து தேவை, வணிக சாத்தியம் போன்றவற்றைப் பொறுத்து மேற்கொள்ளப்படுகிறது.

இந்திய விமான நிலைய ஆணையமானது சென்னை விமான நிலையத்தை விரிவாக்கம்/மேம்படுத்தும் பணியை ரூ.2467 கோடியில் முதல் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டம் என தொடங்கியுள்ளது. முதல் கட்டத்தின் கீழ், ஒரு புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டிடம் கட்டப்பட்டு, தற்போதுள்ள ஆண்டொன்றுக்கு 23 மில்லியன் பயணிகளில் இருந்து ஆண்டுக்கு 30 மில்லியன் பயணிகளுக்கு உயர்த்திட விமான நிலையத்தின் பயணிகளைக் கையாளும் திறனை மேம்படுத்தும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டத்திற்கான கட்டுமானப் பணிகளும் ஜூலை, 2025க்குள் முடிவடைய வாய்ப்புள்ளது. இரண்டாம் கட்டப் பணிகள் முடிந்த பிறகு, விமான நிலையம் ஆண்டுக்கு 35 மில்லியன் பயணிகளைக் கையாள முடியும்.

ஆண்டுக்கு 1.7 மில்லியன் மெட்ரிக் டன் கையாளும் திறன் கொண்ட, நவீன போதுமான விமான சரக்கு கையாளும் வசதி சென்னை விமான நிலையத்தில் உள்ளது.

நாட்டில் உள்ள சேவை இல்லாத மற்றும் குறைந்த விமான நிலையங்களில் இருந்து பிராந்திய விமான இணைப்பை மேம்படுத்தவும், மக்களுக்கு மலிவு விலையில் விமானப் பயணத்தை மேற்கொள்ளவும், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம், பிராந்திய இணைப்புத் திட்டம் (RCS) UDAN 21.10.2016 அன்று தொடங்கியுள்ளது.

UDAN திட்டத்தின் கீழ் RCS விமானங்களை இயக்குவதற்கான தரம் உயர்த்துவதற்காக வேலூர் விமான நிலையம் வழங்கப்பட்டது. விமான நிலையத்தின் கட்டுமானப் பணிகள் முன்கூட்டியே முடிவடைந்து, விமான நிலையத்திற்கு உரிமம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. இவ்வாறு வேலூர் தொகுதி திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் நாடாளுமன்ற மக்களவையில் எழுப்பிய கேள்விக்கு மத்திய விமானப் போக்குவரத்து துறை இணை அமைச்சர் டாக்டர் வி.கே. சிங் எழுத்து பூர்வமாக அளித்த பதிலில் கூறியுள்ளார்.

கோவை வடக்கு மாவட்டம்

அன்னூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு

கோவை வடக்கு மாவட்டம், அன்னூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் அ. சத்யமூர்த்தி அவர்கள், தான் வகித்து வந்த செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற மு.தனபாலன், (நெ.12/191எ, செம்மாணி செட்டிபாளையம், ம.க.செட்டிபாளையம் அஞ்சல், ச.சா.குளம் வழி, அன்னூர் தாலுகா, கோவை 641107.) அவர்கள், அன்னூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை 600 018.
நாள் : 21.7.2023.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்,
தி.மு.க

திருவள்ளூர் அடுத்த மணவாளநகர், கே.இ.என்.சி. அரசு மேல்நிலைப்பள்ளியில் திருவள்ளூர் மாவட்டம் பள்ளிக்கல்வித்துறை சார்பாக 1,847 மாணவ மாணவியர்களுக்கு ரூ89.03 இலட்சம் மதிப்பீட்டிலான விலையில்லா மிதிவண்டிகளை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி பள்ளி மாணவ மாணவர்களுக்கு வழங்கினார். உடன் மாவட்டஆட்சித்தலைவர்டாக்டர்.ஆல்பிஜான்வர்கீஸ் , திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி ராஜேந்திரன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, கூடுதல் ஆட்சியர் என்.ஒ.சுகபுத்ரா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கோ.சரஸ்வதி,மாவட்ட கல்வி அலுவலர் தேன்மொழி, மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேசன், கே.திராவிடபக்தன், திருவள்ளூர் நகர மன்ற தலைவர் உதயமலர்பாண்டியன், துணைத் தலைவர்கள் சி.சு.ரவிச்சந்திரன், சரஸ்வதி ரமேஷ், மாவட்ட கவுன்சிலர் சரஸ்வதி சந்திரசேகர், ஒன்றியச் செயலாளர்கள் கே.ஹரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், எஸ்.மகாலிங்கம், தலைமை ஆசிரியர் எஸ்.ஞானசேகரன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

வில்லிவாக்கம் கிழக்குப்பகுதி

அவைத்தலைவர் மு.முனுசாமிதாஸ் மறைவு!

கழக முன்னணியினர் அஞ்சலி!

சென்னை, ஜூலை 22-

சென்னை கிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி முன்னாள் 98 ‘அ’ வட்ட கழக செயலாளரும், தற்போது வில்லிவாக்கம் கிழக்கு பகுதி அவைத்தலைவர் மு.முனுசாமிதாஸ் (வயது 75) நேற்று (21.07.2023) மாலை 6 மணியளவில் மாரடைப்பால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் கழக முன்னணியினர், தோழர்கள் அன்னாரது உடலுக்கு மலர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

மறைந்த முனுசாமி தாஸ் அவர்களின் இறுதி ஊர்வலம் இன்று (22.7.2023) பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து (எண்: 24, சாமிதாஸ்புரம், ஆஸ்பிரான் கார்டன் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை -10) புறப்பட்டு கீழ்ப்பாக்கம் கல்லறை யில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

ஒழுங்கு நடவடிக்கை ரத்து

தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 92வது வட்டத்தைச் சேர்ந்த கே.நீலகண்டன், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை 600 018.
நாள் : 21.7.2023.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்,
தி.மு.க